# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2382/35 - 2024 මැයි මස 03 වැනි සිකුරාදා - 2024.05.03

*2382/35 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) (அ) ஆம் உப உறுப்புரையின் கீழ், என்னால் 2022, யூலை மாதம் 22 ஆந் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ், எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி 2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரத்தக்கதாக பின்வரும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்.*
*கொழும்பு 01,*
*2024, மே 03.*


1A - G 41871 — 359 (2024/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### உப அட்டவணை

(1) அந்த அறிவித்தலின் "இல. 01. பாதுகாப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் III ஆம் நிரலில் "இலங்கை அனர்த்த முகாமைச் சட்டம் (2005ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க)" விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

- (2024 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) தேசிய நீரளவைச் சட்டம்

(2) அந்த அறிவித்தலின் "இல. 04. மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலில் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் ;

11. ஆரம்பப் பாடசாலைகளுக்காக தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்துச் செயற்படுத்துதல்

(3) அந்த அறிவித்தலின் "இல. 09. கல்வி அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலின் இல. 50 ஆம் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

51. ஆரம்பப் பாடசாலைகளுக்காக தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்துச் செயற்படுத்துதல்

(ஆ) அதன் I ஆம் நிரலின் இல. 51 மற்றும் 52 விடயங்களை முறையே இல. 52 மற்றும் 53 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் ;

EOG 05-0026

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.